# தீர்வுயோசனையை அரசு முன்வைக்க வேண்டும்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 23 இதழ் 203
யாழ்ப்பாணம் புதன்கிழமை 8 — 9 — 1993

## தொண்டமான் கோரிக்கை

(கொழும்பு) இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையின் தன்மைகளை சிறிலங்கா அரசும், இராணுவமும் உணரும்போதுதான், இதற்கு முடிவு கிடைக்கும் என்று அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழ் மக்களும் தியாக உணர்வுடன் தமது போராட்டத்தில் உறுதியாக உள்ளனர். எவ்வளவுதான் நெருக்கடிகளையும், துன்பங்களையும்

(4-ம் பக்கம் பார்க்க)

## பிரபா, பொட்டம்மான் இருக்குமிடம் தெரியாது

(புதுடில்லி) இலங்கைச் சிறைகளிலோ அரசின் கட்டுப்பாட்டிலோ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனும், பொட்டு அம்மானும் இல்லை என இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் டாக்டர் நெவில் கனகரட்ண தெரிவித்துள்ளார்.

ராஜீவ் கொலையில் முக்கிய சந்தேகநபர்களான பிரபாகரனையும், பொட்டு அம்மானையும் இந்தியாவிடம் ஒப்படைக்க இலங்கை அரசு இந்தியாவுக்கு ஒத்துழைப்புக் கொடுக்கவில்லை எனக் குற்றம் சாட்டி, 'அகில இந்திய ராஜீவ் காந்தி அமைப்பு' இலங்கைத் தூதர் நெவில் கனகரட்ணவுக்கு கடிதம் எழுதியிருந்தது.

இதற்குப் பதிலளித்த இலங்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா அரசின்

# வட-கிழக்கு கடல் தடை குறித்து

# இந்திய அரசு பெரும் அதிருப்தி!

## கச்சதீவு ஒப்பந்தத்தை ஆராயவும் முடிவு!!

(புதுடில்லி)

மன்னாரிலிருந்து திருமலை வரை வட - கிழக்கு கடற்பிராந்தியத்தில் எந்த ஒருபடகும் செல்லக் கூடாது என சிறிலங்கா அரசு அண்மையில் விதித்துள்ள தடை குறித்து இந்திய அரசு பெரும் அதிருப்தியடைந்துள்ளதுடன் இது தொடர்பாக தீவிர பரிசீலனை செய்து வருவதாக இந்திய வெளியுறவு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை அரசின் இந்த முடிவு குறித்து இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் அதிருப்தியடைந்துள்ளதுடன் கச்சதீவு ஒப்பந்தத்தையும் மீளாய்வு செய்வதற்கு ஆலோசித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. சிறிலங்கா அரசின் இந்தத் தடைச்சட்டம் சர்வதேச கடல் எல்லை ஒப்பந்தத்தின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் இந்திய அதிகாரிகள் மேலும்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## சினைப்பர் தாக்குதலுக்கு ஏழாலையில் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்) கட்டுவன் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் ஏழாலையில் வீட்டுக்கூரை மீது இருந்தவர் காயமடைந்து நேற்றுக்காலை 11 - 30 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வீடு வேய்ந்து மூடு கட்

(4-ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கடலில் பீரங்கித் தாக்குதல்!

(யாழ்ப்பாணம்) வடமராட்சி பொலிகண்டி வல்வெட்டித்துறை கடற் பிராந்தியத்திலிருந்து நேற்று அதிகாலை 2-30 மணிக்குப் படையினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## கடற்புலிகளின் பலம் படையினருக்கு அச்சுறுத்தல்

(கொழும்பு) வடக்கு-கிழக்கு போரில் கடற்புலிகளின் பலம் கடற்படைக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாக "சண்டே ஐலண்ட்" பத்திரிகை தெரிவித்துள்ளது.

'கடற்புலி'களின் பலம் பற்றி எழுதப்பட்ட கட்டுரை ஒன்றில், கடற்புலிகள் தற்போதைய யுத்தத்தில் மிக முக்கிய பங்கை வகித்திருக்கின்றனர். விடுதலைப்புலிகள் தரைத்தாக்குதலில் முகாம்களை தகர்க்கும்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## ஆலங்கேணியில் குண்டுவீச்சு படகோட்டி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்) ஆலங்கேணிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு புக்காரா விமானங்கள் நடத்திய குண்டு வீச்சு தாக்குதலினால் படகோட்டி ஒருவர் பலியானார்; பல படகுகள் சேதமடைந்துள்ளன.

நேற்று முன்தினமிரவு எட்டு

(4ம் பக்கம் பார்க்க)

## வேகத் தாக்குதல் படகுகள் கடற்படைக்கு கொள்வனவு

(கொழும்பு) கடந்த மாதம் விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்ட மூன்று கடற்படை படகுகளுக்குப் பதிலாக மேலும் மூன்று வேகத்தாக்குதல் படகுகளை சிறிலங்கா அரசு கொள்வனவு செய்ய விரைந்து நடவடிக்கை எடுத்துள்ளது.

இப்படகுகள் அடுத்த சில வாரங்களில் கொழும்பிற்கு வரவுள்ளன. பிரான்ஸில் தயாரிக்கப்பட்ட இப்படகுகள் வேகம் கூடியதும் கடல் தாக்குதலுக்கு பயன்படக்கூடியதும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பில் கப்பல் கட்டும் தளத்தில் இதேமாதிரி தொழில் நுட்பத்தில் மேலும் பல படகுகள் தயாரிக்கப்பட்டு கடற்படைக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. -ரி

## ஜே.ஆர்.ஜெயவர்த்தன வீடு அரசுக்கு அன்பளிப்பு

(கொழும்பு) முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தனது வீட்டை அரசுக்கு அன்பளிப்புச் செய்துள்ளார்.

கொழும்பு வோட் பிளேஸிலுள்ள தனது வீட்டையே திரு. ஜெயவர்த்தன அன்பளிப்புச் செய்துள்ளார். ஐம்பது வருடங்களுக்கும் மேலாக ஜே. ஆர். தமது மனைவியுடன் இந்த வீட்டில் வசித்து வந்துள்ளார்.

(4-ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் சேவையில் மீண்டும் நரோமா கப்பல் ஓடும்

(யாழ்ப்பாணம்) நரோமா பயணிகள் கப்பல் சேவை மீண்டும் நடைபெறவுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இக்கப்பல் சேவை எதிர்வரும் 14-ம், 21-ம் 28-ம் திகதிகளில் நடைபெறவுள்ளது. ஒவ்வொரு தடவையும் 20 பயணிகளை ஏற்றிக் கொண்டு காங்கேசன்துறையிலிருந்து திருமலை நோக்கிப்புறப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கப்பலில் அவசர பிரயாணம் செய்வதற்கு விண்ணப்பித்திருந்தவர்கள் இன்று 8 ம் திகதி புதன்கிழமை யாழ். அரசாங்க அதிபர் காரியாலயத்திற்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (கே-ரி)

## ஹெலி, விமானம் நோட்டம்

(யாழ்ப்பாணம்) யாழ். குடா நாட்டைச் சுற்றி நேற்றுக் காலை 11-00 மணியளவில் ஹெலிகொப்டர் ஒன்று சுற்றி ரோந்து சென்று திரும்ப பலாலி

(4-ஆம் பக்கம் பார்க்க)

## ரயில்வே முகாமையாளருக்கு குண்டு துளைக்காத கார்

(கொழும்பு) ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளர் டபிள்யூ. ஏ. கே. டி. சில்வாவின் பாவனைக்கென குண்டு துளைக்காத கார் ஒன்று தருவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ரயில்வே திணைக்களத்தின்

4-ஆம் பக்கம் பார்க்க)

**வரி விளம்பரம்**

**செல்வம் ஆட்ஸ்**
**சுன்னாகம்**

அச்சுக்கோப்பாளர் தேவை. றபர் சீல் தயாரிப்பதில் அனுபவமுடையவர்களும், பழக ஆர்வமுள்ள G. C. E. O/L சித்தியடைந்தவர்களும் நேரில் வரவும். (சி-443)

**ஒரு இல்லத்தில்**
**சில உள்ளங்கள்**

ஐம்பத்திஐந்து ரூபாவுக்கு ஓர் உணர்ச்சிகரமான சமூக நாவல். பத்திரிகை விற்பனையாளர்களிடம் கேளுங்கள். (வியாபாரிகளுக்கு கழிவுண்டு) பூபாலசிங்கம், மக்மிலன், ஸ்ரீகாந் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி 441)


# புலிகளுடன் தமிழக அரசிற்கு இரகசிய உடன்பாடாம்

(சென்னை)

ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசின் அண்மைய நடவடிக்கைகளை உற்று நோக்கும்போது விடுதலைப் புலிகளுக்கும் தமிழக அரசிற்கும் இடையே இரகசிய உடன்பாடு எதுவும் ஏற்பட்டுள்ளதா என்று சந்தேகிக்க வேண்டியுள்ளதாக தமிழக சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ் ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றிய அவர் தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து வருவதாகவும் இவ்விடயத்தில் உடனடி நடவடிக்கை மேற்கொள்வது அவசியம் என்றும் தெரிவித்தார்.

மேலும் கடல் வெளியிலிருந்து வெடிமருந்துகள் மற்றும் நவீன ஆயுதங்கள் பொருத்தப்பட்ட படகு கிழக்கு நோக்கி விரைந்துகொண்டிருப்பதாக வெளிவந்த செய்தி அசட்டை செய்யக் கூடியதல்ல என்றும் குறிப்பிட்டார். (க-இ)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று 'பாடும் மீன்' கழகமும் - சென். நீக்கிலஸ் கழகமும் 90 நிமிட உதைபந்தாட்டப்போட்டியில் கலந்து கொள்கின்றன. (வி-சி)


# 3ம் ஆண்டு நினைவஞ்சலி

✝



**திரு. அ. அ.**
**பேதுருப்பிள்ளை**
(வியாபாரியார்)
அவர்கள்
மயிலிட்டி

**தோற்றம்: 15-12-1915**
**மறைவு: 08-09-1990**

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"
(அரு. 11/25)

இளைய மகன் பிறந்து ஏழாம்நாள் இழந்துவிட்டோம் தாயை
தாயை இழந்து தனித்து நின்று எம்மையெல்லாம்
தாயினும் மேலாய் நின்று தாங்கியே வளர்த்தீர் ஐயா
மக்கள் எல்லோர்க்கும் நல்ல மணவினை வாழ்வு தந்தும்
இளையமகள் மணக்கோலம் இனிதேற வில்லையென்று
இதயம் மிக நொந்துநீர் நோயினிலே வாடி நிற்க
நாட்டினிலே நேர்ந்த நலமற்ற சூழலினால்
மயிலிட்டிப்பதியை விட்டு மக்களெல்லாம் இடம்பெயர்ந்து
தம்பசிட்டி மண்ணில் நாம் தனித்திருந்த வேளையிலே
இளையமகள் திருமணத்தை இனிதே நீர் கண்டுவிட்டீர்
கண்டுவிட்ட நிறைம் கனநாட்கள் இவ்வுலகில்
வாழாமல் வானுலகை வாரி அணைத்து விட்டீர்
குண்டு விமானங்கள் குண்டு மழை பொழிய
கலங்கு வானூர்திகளின் உறுமலும் அதிகரிக்க
ஆடம்பரமின்றி அமைதியாய் உன்னுடலை
சின்ன மருமகனின் சிரிடமாம் சக்கோட்டை
மண்ணில் புதைத்து மனம் மிகவே வாடி நின்றோம்
உங்கள் மக்கள் எல்லாம் ஒன்றாகக் கூடியே
ஒரிடமாயிருந்திடும் நாள் கிட்டிடுமோ ஐயா
இறைவன் திருவடியில் உங்கள் ஆன்மா
இன்றுடனே என்றென்றும் வாழும் ஐயா

இங்கன் பிரிவால் துயறுறும்;
பிள்ளைகள், மருமக்கள். பேரப்பிள்ளைகள்.

| | |
|---|---|
| **தேவதிரவியம்** (மகன்)<br>உரிமையாளர்: குணம் கிறீம் ஹவுஸ் சுன்னாகம். | **குணசீலி** (மருமகள்) |
| **சிறில்** (மகன்)<br>நோர்வே | **பேபி** (மருமகள்)<br>நோர்வே |
| **செல்வராணி** (மகள்)<br>தெஹிவளை | **ஞானப்பிரகாசம்** (மருமகன்)<br>(முன்னாள் பிரபல வர்த்தகர், தெஹிவளை) |
| **செல்வரத்தினம்** (மகள்)<br>நீர்கொழும்பு | **மரியநாயகம்** (மருமகன்)<br>முன்னாள் பிரபல வர்த்தகரும், முல்லைத்தீவு மாவட்டசபைதலைவரும் |
| **செல்வமலர்** (மகள்)<br>மானிப்பாய் | **பொனிப்பாஸ்** (மருமகன்)<br>(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்) |
| **செல்வம்** (மகன்)<br>ஹொலண்ட் | **ஜோண்மேரி** (மருமகள்)<br>ஹொலண்ட் |
| **பற்றிக்** (மகன்)<br>சுவிஸ் | **ஜீவா** (மருமகள்)<br>சுவிஸ் |

(எ-8404)



# மாருதி வீடியோ விஷனின்
## புதிய வெளியீடுகள்

1. வள்ளி - ரஜனி, பல்லவி
2. மறவன் - பிரபு, குஷ்பு, கவுண்டமணி
3. தேவர் சாம்ராஜ்யம் - மம்மூட்டி, ஊர்வசி
4. தங்கபாப்பா - ராம்கி பேபிஷாலினி, செந்தில்

**மாருதி வீடியோ விஷன்**
பரமேஸ்வரா சந்தி
திருநெல்வேலி (சி-447)



**தமிழ் மன்றம்**
யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை
(நமக்குத்தொழில் கவிதை நாட்டுக்குழைத்தல் இமைப்பொழுதும் சோராதிருத்தல்)

# பாரதி விழா 1993



**10-9-93 வெள்ளிக்கிழமை**
**மு. ப. 10.00 மணி**
**வட்டுக்கோட்டை, ஒலி மண்டபம்**

மங்கல விளக்கேற்றல்:
ஆசி வழங்கல்:

உரை அரங்கு

1. தலைமையுரை: பொ. அருந்தவநாதன்
 தமிழ்த்துறை யாழ். கல்லூரி
2. "யாது மாகி நின்றாய்"
 "கம்ப வாரிதி" இ. ஜெயராஜ்
 அகில இலங்கை கம்பன் கழகம்
3. "பெண்மை வெல்கென்று கூத்திடுவோமடா"
 திருமதி பூங்கொடி அருந்தவநாதன்
 B. A. Hons
4. "பொழுது புலர்ந்தது யாம் செய் தவத்தால்"
 திரு. அ. குமாரவேல்
 பொருளியற்துறை யாழ். கல்லூரி.

★ இசை அரங்கு ★ நாட்டிய அரங்கு

பெற்றோர் பழைய மாணவர்கள் நண்பர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

தமிழ் மன்றம்
யாழ்ப்பாணக் கல்லூரி.

(ஏ 8406)

மணிவாக்கு

"பிறரின் அன்பை விரும்பாமல் அச்சத்தை விரும்புபவரின் அதிகாரம் வெறுப்புக்குரியதே. அவர்களின் வாழ்க்கை பரிதாபத்துக்குரியது.
—ஜொஸியஸ் நியால்.

# நமது நோக்கு

## வேலன்று வென்றி தருவது!

பாரதப் போர் 18 நாட்கள் நடந்தன. துரியோதனன் தரப்பில் படைக்குத் தலைமை தாங்குவது யார்? பெரிய சர்ச்சை கிளம்பியது. ஈற்றில் பீஷ்மர் தெரிவானார். ஆனால் கர்ணன் ஒத்துழைப்புத் தரவில்லை.

பத்துநாள் போருக்குப் பின் துரோணர் தலைவரானார். புதிய வியூகங்கள் அமைக்கப்பட்டன. தோல்விகளையே சந்தித்தனர்.

அவருக்குப் பின் கர்ணன் - புதிய திட்டங்கள் எனினும் தோல்வியே!

இது பழைய கதை. ஆனால் இன்றைய நிலையிற் பல பாடங்களைக் கற்க வேண்டிய கதை!

தர்மயுத்தம் நடைபெறும் போது அதர்மத்திற்கு யார் தலைமை தாங்கினாலும் தோல்வி நிச்சயமே!

பொழுது போகவில்லை என்பதற்காக, தமிழர்கள் போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை.

உரிமைகள் மறுக்கப்பட்டன. அமைதியான முறையில் உரிமைகளைக் கேட்டபோது கிடைத்தவை அடுத்தடுத்து வந்த இனக்கலவரங்கள்!

போராட்டம் என்பது எமது நாட்டில் மாத்திரம் நடைபெறும் காரியமல்ல, பல்வேறு பகுதிகளில் உரிமைக்குரல் எழுப்பப்படுகின்றது! உரிமை பெறுவதிலேயே முடிகின்றது.

சீனு-இந்திய எல்லைப் பிரச்சனை போராக வெடித்தது. இரு பக்கங்களிலும் பல இழப்புகள். இன்று நாம் காண்பது என்ன? இந்தியப் பிரதமர் சீனு சென்றுள்ளார். தீர்வுகளைப் பற்றித் தீர்மானிக்க!

இங்கோ— "கூட்டுப் படை அமைப்பு கலைப்பு: புதிய பாதுகாப்புக் குழு நியமனம்!" என்ற செய்திகளே பரபரப்பாகத் தரப்படுகின்றன.

கூட்டுப்படைத் தலைமையகம்: பின்னர் அந்தந்த தளபதிகளுக்கு அதிகாரம். மீண்டும் கூட்டுப் படைத் தலைமையகத்திற்கு அதிகாரம். இன்று அது கலைக்கப்பட்டுப் புதிய குழு நியமனம்.

இப்படி மாறி மாறித் தலைமைகளை மாற்றியும், புது வியூகங்கள் வகுத்தும் போரைத் தொடரவே முயற்சிகள்

பாரதப் போர் தந்த பாடத்தை அவர்கள் உணரவில்லை.

அது மாத்திரமல்ல, படைபலம் வெல்லாது; செங்கோல் ஆட்சியே-நீதியான தீர்வே - வெல்லும் என்கிறார் வள்ளுவர்.

"வேலன்று வென்றி தருவது!"-இது வள்ளுவர் தரும் பாடம்!

# படகின் மீது ஒளியை பாய்ச்சி 'ஹெலி' துப்பாக்கிச் சூடு

## தப்பிவந்த ஓட்டி தகவல்

(தாளையடி)

பூநகரி - கிளாலி கடற்பகுதியில் பல தடவைகள் சுற்றி வட்டமிட்ட இரண்டு ஹெலி கொப்டர்களில் ஒன்று நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் நாம் வந்த படகின் மீது ஒளியைப் பாய்ச்சி எமது படகின் மீது துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தபோது எமது படகில் இருந்த இன்னுமோர் வெளியிணைப்பு இயந்திரத்தையும் இயக்கிப் படகின் வேகத்தினை அதிகரித்தோம். இதன் காரணத்தால் ஹெலிகொப்டர் எமது படகின் மீது வைத்த இலக்குத் தவறிவிட மின்னுெளி எமது படகுக்கு அண்மையாகச் சென்று கொண்டிருந்த படகின் மீது விழவே அப்படகின் மீது ஹெலியில் இருந்து துப்பாக்கி வேட்டு தீர்க்கப்பட்டது. இதனால் நானும் சகபடகோட்டியும் பொருட்களின் சொந்தக்காரரும் மயிரிழையில் உயிர் தப்பினோம் என கட்டைக்காடு கிராமத்தைச் சேர்ந்த படகோட்டி திரு. வின்சன்ற் மைக்கேல் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்: நேற்றுமுன்தினம் மாலை 6-45 மணிக்கு பூநகரி-நல்லூர் இறங்குதுறையில் வைத்து எமது படகில் பொருட்களை ஏற்றுவதற்கு ஆயத்தமான போது கரியநிற விமானம் ஒன்று இறங்குதுறைக்கு மேலாகப் பறந்து சென்றதும் இன்றிரவு கடலில் ஏதாவது நடக்கலாமென எண்ணினேன். இருந்தும் எமது இரு படகுகளிலும் பொருட்களை ஏற்றியபின் நாமும் பொருட்களின் சொந்தக்காரருமாக ஆறுபேர் இரவு 7-45 மணியளவில் நல்லூர் கரையிலிருந்து பயணத்தை ஆரம்பித்தோம். சுமார் அரை மணி நேரத்தின் பின் கிளாலிக் கரைக்கு அண்மையாக ஹெலி ஒன்றிலிருந்து ஷெல் வேட்டுக்களைத் தீர்ப்பது தெரிந்தது. இருந்தும் படகைத் தொடர்ந்து செலுத்தினோம்.

இரவு 8-30 மணியளவில் நாம் நடுக்கடலில் வந்து கொண்டிருந்தவேளை இரண்டு ஹெலி கொப்டர்கள் நடுக்கடலில் துப்பாக்கி வேட்டுக்களைத் தொடர்ந்து தீர்த்தவண்ணமிருந்தன. இரவு 9-15 மணியளவில் எமது படகுக்கு மேலாகப் பறந்த ஹெலிகொப்டர் ஒன்று எமது படகின் மீது ஒளியைப் பாய்ச்சி வேட்டுக்களைத் தீர்த்தபோது நாம் இன்னுமோர் இயந்திரத்தை இயக்கி வேகத்தை அதிகரித்தமையினால் எமக்கு வந்த பேராபத்திலிருந்து தப்பித்துக் கொண்டோம்.

இது முடிந்தபின் இரவு 9-30 மணியளவில் கேற்பரப்புக்கு மேலாக பறந்த குண்டு வீச்சு விமானங்கள் கடற்கரையோரமாக மூன்று குண்டுகளை வீசின. இதனால் நடுக்கடலில் எமது படகை செலுத்தி, விமானம் குண்டுவீசிச் சென்றபின் கரையை அடைந்தோம். கரையில் வெளிச்சமோ பொதுமக்களோ காணப்படவில்லை. இரவு 11 30 மணியளவிலேயே கரைக்கு வந்து பொருட்களை இறக்கத் தொடங்கினேம்.

இப்படகில் வந்த வியாபாரிகள் படகோட்டிகளின் சாதுரியத்தாலும் அவர்கள் அவ்வப்போது மேற்கொண்ட நடவடிக்கைகளினாலும் நிகழவிருந்த பேராபத்திலிருந்து காப்பாற்றப்பட்டதாக படகோட்டிகளை பாராட்டினர்.

(163-இ)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நாளை வியாழக்கிழமை பி. ப. 3-00 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்தில் சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அமைப்புக்கள், பல நோக்குக்கூட்டுறவுச் சங்க இயக்குநர்கள் ஊழியர்கள், தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்களின் இயக்குநர்கள் ஊழியர்கள், தச்சுத்தொழிலாளர் சங்கம், சீமெந்துக் கட்டிடத் தொழிலாளர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், சலவைத்தொழிலாளர் சங்கம், தமிழ்பேசும் போக்குவரத்து ஊழியர் சங்கம், ஆலை உரிமையாளர் சங்கம், முதலிய வெகுஜன அமைப்புகளின் உறுப்பினர்கள் கலந்துகொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

# விடுதலைப்புலிகளின் நடமாட்டம் எதுவும் தமிழகத்தில் இல்லை

## முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு

(சென்னை)

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் எதுவும் தமிழகத்தில் இல்லையென தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாகவும் தமிழகத்திலிருந்து கர்நாடகத்திற்குள் ஊடுருவிய விடுதலைப் புலிகள் பிரபல சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் கும்பலுடன் தொடர்பு வைத்திருப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் நேற்று முன்தினம் பங்களூரில் குறிப்பிட்டு உரையாற்றியதனை முதல்வர் செல்வி ஜெயலலிதா முற்றாக மறுத்துள்ளார்.

தமிழக அரசியல் நிலைப்பாடு குறித்தும் ஏனைய பிரச்னைகள் மற்றும் ஐயப்பாடுகள் இருப்பின் தமிழக அரசுக்கு தெரியப்படுத்த வேண்டுமே தவிர அதனை அரசியல் பிரச்னையாக மாற்ற மத்திய அரசு ஒருபோதும் முயலக்கூடாதென முதல்வர் ஆக்ரோஷமாக தெரிவித்தார்.

மேலும் தமிழகத்தில் தங்கியிருக்கும் இலங்கை தமிழ் அகதிகளை தாயகம் திருப்பி

(4-ம் பக்கம் பார்க்க)

# இராசிபலன்

08-09-1993

புதன்கிழமை

(தமிழுக்கு ஆவணி 23)

ஸப்தமி மாலை 7-27 வரை. கார்த்திகை மு. ப. 8-37 வரை. இராகுகாலம் பகல் 12-04 முதல் 1-34 வரை. சுபநேரம் மாலை 4-34 முதல் 6-04 வரை. அமிர்தசித்த யோகம். ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி.

மேஷம்: நிர்ப்பந்தம், வயிற்றுக்கோளாறு, அலைச்சல்.

இடபம்; காரிய அனுகூலம், தைரியம், பணவரவு.

மிதுனம்: உடலசதி, வீண் கலவரம், தொழில் பாதிப்பு

கடகம்: சிறுபயணம், விரும்பியது கிட்டல், வாக்கு வசீகரம்.

சிங்கம்; உல்லாசம், பரோபகாரம், மகிழ்ச்சி.

கன்னி: வழியில் இடையூறு பணமுடை, வெறுப்பு.

துலாம்: கீழ்ப்படிதல், சிறு நஷ்டம், துயரம்.

விருச்சிகம்: அதிகாரிகள் சந்திப்பு, விருந்துபசாரம் வெற்றி.


தனுசு: பந்துஜன சேர்க்கை பக்தி, பயணம்.

மகரம்: சோர்வுகள், உறவினர் தொல்லை, மனவேதனை.

கும்பம்: சங்கடம், காலஉணவு, யோசனைமிகுதி.

மீனம்: எதிர்பாராத நன்மை தொழில் லாபம், சுபநிகழ்வு.

ஜோஸ்யர்


| | | |
|---|---|---|
| 1st Prize | செ. பாஸ்கரன் | வல்லிபுர குறிச்சி. |
| 2nd ,, | N. அன்னலட்சுமி | கைதடி மேற்கு, கைதடி. |
| 3rd ,, | K. கேதீஸ்வரன் | பலப்பை லேன் தெற்கு, பருத்தித்துறை. |
| 1st Consolation | சாமி | கல்வயல், சாவகச்சேரி. |
| 2nd ,, | க. திலீபன் | செம்பியடிவளவு மானிப்பாய்தெற்கு மானிப்பாய். |
| 3rd ,, | தி. சந்திரலிங்கம் | சக்தி ஸ்ரோஸ், V. V. T. |
| 4th ,, | P. மோகன் | சாவகச்சேரி. |
| 5th ,, | ந. கேந்திரன் | வல்லிபுர குறிச்சி |
| 6th ,, | கிறிஸ்ர மேல்கிஸ்டா | திருக் கன்னியர் மடம், மிருசுவில். |
| 7th ,, | C. S. Balah | 6 18, Manipay Road, Jaffna. |
| 8th ,, | தி. சந்திரலிங்கம் | சக்தி ஸ்ரோஸ் V. V, T. |
| 9th ,, | திருமதி ச. விஜயதர்மா | 86/174, கண்டி வீதி, யாழ்ப்பாணம். |
| 10th ,, | N. நாகேந்திரன் | வல்லிபுரகுறிச்சி |

6வது போட்டியில் இன்றே பங்குபற்றுங்கள். பங்குபற்றுவதற்கான நியந்தனை ஜாம், கோடியல் அல்லது பியர் ஏதாவது 5 போத்தல்களைக் கொடுத்து, அதற்கான பணத்துடன் ஒரு அதிர்ஷ்டலாபச் சீட்டையும் பெற்றுக்கொள்ளவும்.

பின்வருவோர் புதிய முகவர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

1. பேரம்பலம் மருந்துக்கடை, சுன்னாகம்
2. மாருதி ஸ்ரோர்ஸ், கே. கே. எஸ், வீதி, வல்வெட்டித்துறை.
3. வி. சுந்தரலிங்கம் ரஜனி பீடா ஸ்ரோர்ஸ் இமையாணன், உடுப்பிட்டி.
4. செல்வராஜா ஸ்ரோஸ் 10ம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(எ-3402)


நல்வாழ்வுக்கு ஆதாரம், தன்னிறைவான பொருளாதாரம்

# புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சியே இராணுவத்தில் சேர்வதற்கு சிங்கள இளைஞர்கள் தயக்கம்

(கொழும்பு)

புதிதாக இராணுவத்தில் சேரும் ஒருவருக்கு மாதச்சம்பளமாக 5,173 ரூபாவை அரசு வழங்க முன்வந்துள்ள போதிலும் இராணுவத்தில் சேர்வதற்கு சிங்கள இளைஞர்கள் பெரும்தயக்கம் காட்டுவதாக கொழும்புப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

5ம் வகுப்பு படித்த சாதாரண ஒரு இராணுவ சிப்பாய்க்கு மாதாந்தம் 5,173 ரூபா சம்பளம் உட்பட இலவச உணவு, உடை, மருத்துவ வசதிகள், தங்குமிடம், போக்குவரத்து வசதிகள் அனைத்தையும் அரசு தற்போது வழங்கி வருகிறது.

இவைதவிர திருமணம் ஆன ஒரு இராணுவ சிப்பாய்க்கு வீட்டுவாடகையாக 850 ரூபா முதல் 2 ஆயிரம் ரூபா வரை வழங்கப்பட்டுவருகின்றது.

சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் சேர்வதற்கு பின்நிற்பதற்கு முக்கிய காரணம் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு தினமும் இராணுவத்தினர் பலியாகி வருவதே என்று அப்பத்திரிகைகள் தமது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளன. (வீ-ரி)

## கிரிக்கெட்
## தென். ஆபிரிக்கா 280 - 2

(கொழும்பு)

இலங்கை, தென்னாபிரிக்கா கோஷ்டிகளிடையே கொழும்பில் நடைபெறும் 2வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 2ம்நாள் ஆட்டம் நேற்று முடிவடையும் போது, தென்னாபிரிக்கா முதலாவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 280 ஓட்டங்களை பெற்றது.

இலங்கை முதல் இன்னிங்ஸில் மொத்தம் 168 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. (வீ)

# வடக்கு - கிழக்கு புனரமைப்புக்கு 253 மில்லியன் ரூபா

(யாழ்ப்பாணம்)

1994ம் ஆண்டு வடக்கு-கிழக்குப் பகுதிகளில் புனரமைப்பு வேலைகளுக்கு 253 மில்லியன் ரூபா தேவைப்படுமென கணக்கிடப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்குப் பகுதிகளின் புனரமைப்பு வேலைத் திட்டத்துக்கான ஆலோசனைக் கூட்டம் நேற்று, யாழ். அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் தலைமையில் யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

ஒதுக்கப்படுத்தப்பட்ட நிதி சம்பந்தமாகவும் மேற்படி கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாகவும், யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (வீ-ரி)

## இனப்பிரச்சினையால் பயனடைவோர் யுத்தத்திற்கு மேலும் தீமூட்டி வருகிறார்கள்

(கொழும்பு)

"அண்டம் கழுகுகள் போன்று அதிகார வர்க்கத்தினரும், அரசியல் வாதிகளும் பெரும்முதலாளிகளும் வடக்கு கிழக்கு போரில் மடியும் உடல்களிலும் ரத்தத்திலும் தேறித் திளைக்க விரும்புகின்றனர்.

நாடாளுமன்ற கட்டிடத்தில் அண்மையில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் சபாநாயகர் எம். எச். முகம்மத் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இந்தப் போரினால் தினந்தவர்களும் பயன் பெற்றோரும் வடக்கு கிழக்கு போருக்கு மேலும் தீ மூட்டுவதோடு, எக்கேடு கெட்டுப் போனாலும் போகட்டும் என்ற நிலையில் உள்ளனர் என்றார். (கே-ரி)

## மட்டக்களப்பில் படையினர் தாக்குதலில் ஒருவர் பலி; 8வீடுகள் நாசம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கோவில் போரதீவில் ஸ்ரீலங்காப்படையினர் அண்மையில் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலில் தமிழ்ப் பொது மகன் ஒருவர் கொல்லப்பட்டார். இரு கடைகள் மற்றும் எட்டு வீடுகள் படையினரால் எரித்து நாசமாக்கப்பட்டுள்ளன.

ஒரு பிள்ளையின் தந்தையான பூபாலபிள்ளை கோபாலபிள்ளை என்பவரே படையினரின் தாக்குதலில் பலியானவராவார்.

வெல்லாவெளி, பெரிய போரதீவு ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து வந்த படையினர் கோவில் போரதீவில் உடுமாமம் பகுதியிலேயே மேற்படி கண்மூடித்தனமான தாக்குதலில் ஈடுபட்டனர்.

படையினரின் இத்தகைய தாக்குதலினால் இப்பகுதியில் குடியிருந்த மக்கள் பயப் பீதியினால் வெளியேறி வருவதாகவும் தெரியவருகிறது. (க-இ)

## இந்தியாவும் சீனாவும் சமாதான உடன்பாடு

(பீக்கிங்)

இந்தியாவும், சீனாவும் நேற்றுச் சமாதான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

1962ம் ஆண்டு நடைபெற்ற இந்திய-சீன யுத்தத்தின் பின்னர், இரு நாடுகளின் கட்டுப்பாட்டில் உள்ள எல்லைப் பகுதியில் சமாதானம், அமைதியை ஏற்படுத்துவதுடன், எல்லைப் பகுதியிலிருந்து இரு தரப்புத் துருப்புக்களையும் விலக்கிக்கொள்வது, எல்லையில் பதட்டத்தைத் தணிப்பது என்பன குறித்து இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானது.

சீனாவுக்கு விஜயம் செய்த இந்தியப் பிரதமர் நரசிம்மராவும், சீனப் பிரதமர் லீ பெங்கும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். -கே

## கலிபர் தாக்குதல்

(எழுதுமட்டுவாள்)

கிளாலி கடல் பரப்பை சுற்றி நேற்றிரவு வட்டமிட்ட ஹெலிகொப்டர் ஒன்று இறங்கு துறையை நோக்கி கலிபர் தாக்குதலை நடத்தியது. (170)

# இந்திய வர்த்தகர் உருக்கு கூட்டுத்தாபனத்தை விலைக்கு வாங்க முயற்சி

(கொழும்பு)

இந்தியாவில் மிகப் பிரபலமான வர்த்தகச் சக்கரவர்த்தியாக விளங்கும் டாடா, இலங்கையின் உருக்குக் கூட்டுத்தாபனத்தை விலைக்கு வாங்குவது தொடர்பான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

முன்னர் அரசு உடைமையாக இருந்த உருக்குக் கூட்டுத்தாபனமே இப்போது தனியார் மயமாகியிருக்கும் உருக்குக் கூட்டுத்தாபனம் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் மிகப் புகழ் வாய்ந்த வர்த்தகர்களாக விளங்கும் மஹாராஜா ஸ்தாபனத்தார், இந்தியாவின் டாடா ஸ்தாபனத்தாருக்காக திறைசேரி அதிகாரிகளுடன் இதற்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளனர்.

விரைவில் டாடா ஸ்தாபனம், இலங்கையின் உருக்கு உற்பத்தித்துறையில் ஏகபோக உரிமையை இதன் மூலம் பெற உள்ளனர் என வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ)

### விடுதலை புலிகளின்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பும் விடயத்தில் மத்திய அரசு அரைமனத்துடனேயே செயல்படுவதாகவும் முதல்வர் ஜெயலலிதா குறைப்பட்டுக் கொண்டார். (க-சி)

### ஸ்ரீலங்கா அரசின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

இந்த உடன்படிக்கைச் சட்டம் இந்திய மீனவர்கள் கச்சதீவுப் பகுதியில் மீன்பிடிக்கிறதைப் பாதிக்கிறதா என்றும் இந்திய இலங்கை அரசுகளின் கச்சதீவு ஒப்பந்தத்தையும் பாதிக்கிறதா என்றும் இந்திய அரசு பரிசீலிக்கும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இந்த புதிய கடல் தடைச் சட்டம் இந்திய அரசுடன் கலந்தாலோசித்த பின்னர் ஸ்ரீலங்கா அரசால் பிறப்பிக்கப்பட்டதாக பத்திரிகைகளில் வெளியான செய்திகளையும் இந்திய அதிகாரிகள் மறுத்துள்ளனர். (கே-வீ)

### கடற்புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போது கடற்புலிகளும் பல கடற்படைக் கலங்களைத் தகர்த்துள்ளனர். 1991ம் ஆண்டின் பின் கடற்புலிகளின் பலம் வியக்கத்தக்க அளவு அதிகரித்துள்ளது.

அண்மையில் கிளாலிக்கடலிலும், பருத்தித்துறைக்கடலிலும் இடம்பெற்ற சம்பவங்கள் கடற்புலிகளின் பலத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு இராணுவ தளபதிகள் கொப்பேகடுவ, விஜயவிமலரத்ன கொல்லப்பட்டபின் வடக்கில் பாரிய தாக்குதல் எதுவும் இடம்பெறவில்லை.

தற்போதைய நிலையை மாற்ற அரசு விரைந்து செயற்படவேண்டும். கூட்டுப்படை உத்தரவு யுத்தத்தில் எதிர்பார்த்த வெற்றியைத் தராது என இளம் இராணுவத்தினர் கள் கருதுகின்றனர். இதனையும் அரசு கவனத்திற்கொள்ள வேண்டுமெனவும் அக்கட்டுரை குறிப்பிட்டுள்ளது. (சி-ரி)

### தீர்வு யோசனையை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்தபோது, தமிழ் மக்கள் அதற்கு ஈடு கொடுத்து நிற்கின்றனர். இந்த உண்மையைச் ஸ்ரீலங்கா அரசும், இராணுவமும்புரிந்துகொள்ளுமாயின் இப்பிரச்சினைக்கு முடிவு கிடைத்துவிடும் என அவர் மேலும் கூறினார்.

இலங்கையின் இனப்பிரச்சினை ஓர் இழுபட்ட பிரச்சினையாகக் காணப்படுவதாகவும் குறிப்பிட்ட அவர், இவ்வளவு அழிவுகள், சேதங்கள், உயிர் இழப்புக்களுக்கு மத்தியிலும் தமிழ் மக்களும் சரி, விடுதலை புலிகளும் சரி உறுதி குலையாமல் இருக்கின்றனர். இந்த உறுதிப்பாடு நீடிப்பதன் மூலம் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றத்தைக் கொண்டு வரக்கூடியதாகவும் இருக்கும் என்றும் திரு. மகேந்திரன் சுட்டிக் காட்டினார்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு விடுதலைப் புலிகளுடன் பேசியே தீர்வு காண வேண்டும். அதுவே நிலைத்து நிற்கக்கூடிய தீர்வாக அமையும். விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் எந்தத் தீர்வையும் எடுக்க முடியாது. அது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகவே அமையும் என்றும் அவர் கூறினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீலங்கா அரசு இனப் பிரச்சினைத் தீர்வு குறித்து நல்லதொரு யோசனையை முன்வைப்பதுடன், விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தவேண்டும் எனவும் அவர் அரசைக் கோரியுள்ளார்.

தமிழ் அரசியல் கட்சிகள் தங்களுக்குள்ளே உள்ள வேற்றுமைகளை கைவிட்டு போரை நிறுத்துவதற்கு ஆக்கபூர்வமான முயற்சியில் ஈடுபடுதல் அவசியம்.

சிங்கள மக்களும் போராளிகளைத்துப் போனார்கள் ஒரு சமாதான ஒப்பந்தத்தை வரவேற்கவே செய்வார்கள் உதாரணத்திற்கு திரு காமினி

### இனப்பிரச்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டிக் கொண்டிருந்த ஏழாலை வடக்கைச் சேர்ந்த குருநாதி ஸ்ரீபாக்கியநாதன் (41 வயது) என்பவரே இவ்வாறு ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி இருகால்களின் துடையினூடும் சன்னம் பாய்ந்து இரத்தம் பெருகிய நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (56 -157-ரி)

### பிரபா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கைத் தூதர், பிரபாகரனும், பொட்டு அம்மானும் தற்போது எங்கு இருக்கிறார்கள் என்பது பற்றி இலங்கை அரசுக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் வடபகுதிக் காடுகளுக்குள் இருப்பதாகப் பேசப்படுகிறது எனவும் கூறியுள்ளார். -இ-ரி

### ஹெலி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சென்றது நேற்று முழுவதும் அடிக்கடி விமானங்கள் பறந்த வண்ணம் இருந்தன.

இதேவேளை நேற்றுக் காலை பத்து மணியளவில் செட்டு விமானம் ஒன்று சுழிபுரம், சித்தன்கேணி, சங்கானைப் பகுதி வான் பிரதேசத்தை நோட்டமிட்டபடி யாழ்ப்பாணப் பகுதியை நோக்கிப் பறந்து சென்றது. (129, 59, ரி)

### வடமராட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கரையோரப் பகுதிகளில் விழுந்து வெடித்துச் சிதறியதால் கரையோரப் பகுதி மக்கள் நித்திரையில் திடுக்குற்று எழுந்து செய்வதறியாது திகைத்திருந்தனர்.

கடந்த மூன்று நாட்களாக கடற்படையினர் அப்பகுதிகளில் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டு வருவதாகவும் நித்திரை இன்றிய இரவுகளை கழிப்பதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (56 - ரி)

ஜயசூரியா இந்திய இலங்கை ஒப்பந்தத்தால் தமிழர்கட்கு கூடிய அதிகாரம் போய்விட்டதாகக் கூறி மந்திரி பதவியை ராஜினாமா செய்து, பிரசாரம் செய்த போதும் அது சிங்கள மக்கள் மத்தியில் எடுபடவில்லை.

தமிழ் குழுக்களோ கட்சிகளோ இதுகால வரை ஒன்றையும் சாதித்து விடவில்லை. போரை தொடர்வதோ நிறுத்துவதோ புலிகளே தீர்மானிக்க வேண்டும் இதை எவரேனும் சொல்வதில் நான் பின்னிக்க மாட்டேன். (கே-ரி)

### ஆலங்கேணியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மணி முதல் பத்து மணிவரை கிளாலி பூநகரி கடற்பகுதியில் மேலாக சென்ற ஹெலிகொப்டரிலிருந்தும் புக்காரா விமானங்களிலிருந்தும் கிளாலி ஆலங்கேணிப் பகுதியில் பலத்தகுண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன.

நாகர் கோயில் அகதிமுகாமில் வசித்து வரும் பாலச்சந்திரன் கமலதாசன் (16 வயது) என்பவரே இச் சம்பவத்தில் பலியானவராவார்.

இரவு வேளையில் கிளாலிப் படகுச் சேவை இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை, இரண்டாவது தடவையாகவும் புக்காரா விமானம் ஒன்று நேற்று அதிகாலை 3-30 மணிக்கு கிளாலிக் கரையோரப் பகுதியை வட்டமிட்டுச் சென்றது.

இரவு 10 மணிக்கு மூன்றாம் தடவை இரண்டு புக்காரா விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலால் படகுச் சேவையில் சிறிது தாமதம் ஏற்பட்ட போதிலும் சேவைதொடர்ந்து நடைபெற்றது. (156, 163, 56, ரி)

### ரயில்வே

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பணத்திலிருந்து 80 லட்சம் ரூபாவை செலவுசெய்து இந்த குண்டு துளைக்காத கார் தருவிக்கப்பட்டுள்ளதாம்.

குண்டு துளைக்காத கார் ஒன்றைப் பாவிக்கும் அரசாங்கத் திணைக்களம் ஒன்றின் முதலாவது தலைவர் இவர் என்ற பெருமை இதன் மூலம் திரு. சில்வாவுக்கும் கிடைத்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (இ)

### ஜே. ஆர்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சீவிய உரித்து அடிப்படையில் இந்த வீடு அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. திரு. ஜெயவர்த்தனவும் அவரது மனைவியும் உயிருடன் இருக்கும் வரையில் இந்த வீட்டிலேயே வசித்து வருவர். அவர்கள் இருவரும் காலமான பிறகு இந்த வீடு அரசின் உரிமையாகிவிடும்.

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட ஜெயவர்த்தன கலாசார நிறுவனத்தின் சொத்தாக இந்த வீட்டை அரசு பயன்படுத்தத்திட்டமிட்டுள்ளது. இ-ரி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10 836/B